TNVR070002462024

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 24 ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண். 22/2024**

C.N.R.No.TNVR070002462024

------

கருப்பசாமி, வயது சுமார் 77, இந்து, த/பெ. லேட். ராமர், கதவு எண்.3/288, சுந்தரக்குடும்பன்பட்டி கிராமம், செட்டுடையான்பட்டி அஞ்சல், சாத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம். .. வாதி

/எதிர் /

1) * க. மாரியப்பன் (இறப்பு), இந்து, த/பெ. லேட். கந்தன், திருவிருந்தான்பட்டி கிராமம், சாத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்.

2) மா. மாரிமுத்து, வயது சுமார் 45, இந்து, த/பெ. மாரியப்பன், திருவிருந்தான்பட்டி கிராமம், சாத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்.

3) மா. மாணிக்கம், வயது சுமார் 50, இந்து, த/பெ. மாரியப்பன், திருவிருந்தான்பட்டி கிராமம், சாத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம். .. பிரதிவாதிகள்

* As per Amended I.A.No.01/2025 allowed on 20.08.2025

இந்த வழக்கானது பிராது தபசில் கண்ட சொத்தை வாதி அமைதியாக அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ அவர்தம் வகையாட்களோ சட்டத்திற்கு புறம்பான வழியில் எந்தவித இன்னலோ, இடையூறோ செய்யக்கூடாது என்று தடை செய்து பிரதிவாதிகளுக்கு எதிராக ஓர் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்க வேண்டியும், இவ்வழக்கின் செலவுத் தொகை வேண்டியும் மற்றும் இதர பரிகாரங்கள் வேண்டியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வழக்கு தாக்கல் நாள் | 08.04.2024 |
| வழக்கு கோப்பிற்கு எடுத்த நாள் | 15.04.2024 |
| வழக்கு மூலம் | 09.06.1970, 08.04.1978, 16.01.1992, 25.02.2024 ஆகிய தேதிகளில் நல்லம நாயக்கன்பட்டி கிராமத்தில் வைத்து உற்பத்தி |

| | |
|---|---|
| நீதிமன்றக் கட்டணம் | தாவா வழக்கின் மொத்த மதிப்பு ரூ.1,000/- என மதித்து அதற்கு த.நா.நீ.மு.க. சட்டப்பிரிவு 27(c)ன் படி ரூ.30/- நீதிமன்றக் கட்டணமாக செலுத்தப் பட்டுள்ளது. |

இந்த வழக்கானது இறுதியாக என் முன்பாக 22.06.2026 அன்று விசாரணைக்காக வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. வெ. விநாயகமூர்த்தி, அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. G.K. முரளி, அவர்கள் ஆஜராகியும், போதிய காலஅவகாசம் அளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்ட நிலையிலும், வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்பாணை

1) வாதியின் வழக்கு அனுமதிக்கப்படுகிறது.
2) பிராது தபசில் கண்ட சொத்தை வாதி அமைதியாக அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ அவர்தம் வகையாட்களோ சட்டத்திற்கு புறம்பான வழியில் எந்தவித இன்னலோ, இடையூறோ செய்யக்கூடாது என பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கப்படுகிறது.
3) செலவுத் தொகை பற்றி எந்த உத்தரவும் இல்லை.
(இருதரப்பிலும் செலவுத் தொகை பட்டியல் தாக்கல் இல்லை)

## தபசில் சொத்து விபரம் -

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், விருதுநகர் ரீடி., பந்தல்குடி சப்டி, நல்லமநாயக்கன்பட்டி கிராமம் புஞ்சை சர்வே எண்.45/16-ல் ஏக்கர் 2 சென்ட் 87-ல் வடபுறம் சென்ட் 96 தபசில் சரி.

2026-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24-ஆம் நாள் என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டுள்ளது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
அசல் வழக்கு எண். 22/2024
தீர்ப்பாணை
நாள் - 24.06.2026.